# CELEBRATION OF FINANCIAL LITERACY WEEK - 2022

**Organiser: Dr. M. SELVAM**

## Dinamalar, Tiruchirappalli Edition, Page No.: 09, Dated: 19.02.2022

### நிதிக்கல்வியறிவு வார கொண்டாட்டம்

திருச்சி, பிப். 19-

நாட்டின் 75வது சுதந்திர ஆண்டு விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக கல்வி நிலையங்களில் சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தேசிய பங்கு சந்தை கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழக நிதி சந்தைகள் மையம் சார்பில் நிதிக்கல்வியறிவு வாரம் கொண்டாடப்பட்டது. வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை தலைவர் செல்வம் வரவேற்று பேசுகையில், 'நிதிக் கல்வியறிவை வளர்க்க இந்திய ரிசர்வ் வங்கி நிதிக் கல்வியறிவு வாரத்தினை தொடங்கியது. மின்னணு பரிவர்த்தனைகளின் வசதிகள் மற்றும் பாதுகாப்பு, நுகர்வோர் நலன் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதே இதன் நோக்கமாகும், என்றார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வம் பேசுகையில், 'நிதிக் குறித்த நுட்பமான கேள்விகளுக்கு விடை கண்டறியும் பாதையில் நிதியியல் அறிவை வளர்த்துக் கொள்ளலாம். நிதியியல் அறிவு குறிக்கோளை அடைய பகுத்தறியும் நோக்கில் அளவீடுகள் குறித்த கற்றல் இன்றியமையாதது' என்றார்.

தேசிய பங்குச் சந்தை கழக தலைமை மேலாளர் ரங்கநாதன் பேசுகையில், 'பள்ளி, கல்லூரி மற்றும் தொழில்துறை வல்லுனர்கள் ஆகியோருக்கு உகந்த நிதிக்கல்வி குறித்த திட்டங்கள் மூலம் நிதிக்கல்வியறிவை வளர்க்கும் செயல்பாடுகளை தேசிய பங்குச் சந்தை கழகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. வருங்காலத்தில் மிகப்பெரிய வளர்ச்சி காணும் வாய்ப்புள்ள நிதி பொறியியல் துறையில் மாணவர்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்' என்றார். பாரதிதாசன் பல்கலைக்கழக பொருளியல் துறை ஓய்வு பெற்ற மூத்த பேராசிரியர் அய்யம் பிள்ளை, "2022 ஆண்டின் ஒன்றிய பட்ஜெட் புரிதலுக்கான பகுப்பாய்வு வழிமுறைகள்" என்ற தலைப்பில் பேசினார்.

## Cauvery Times, Page No.: 04, Dated: February 25- March 03, 2022





### BDU: நிதிக்கல்வி வாரம் கொண்டாட்டம்!

தேசிய பங்கு சந்தைக் கழகம் (NSE ACADEMY) மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக நிதி சந்தைகள் மையம் ஆகியவை இணைந்து நிதிக் கல்வி வார கொண்டாட்டத்தை, 75வது சுதந்திர ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நடத்தின. வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறைத்தலைவர் முனைவர் மு.செல்வம் வரவேற்றார். அவர் பேசும் போது, மின்னணு பரிவர்த்தனைகளின் வசதிகள் மற்றும் பாதுகாப்பு நுகர்வோர் நலன் ஆகியவை குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதே இந்த விழாவின் நோக்கம் என்றார். பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ம.செல்வம் விழாவை தொடங்கி வைத்து பேசினார். அப்போது... பகுத்தறியும் நோக்கில் அளவீடுகள் குறித்த கற்றல் இன்றியமையாதது என எடுத்துரைத்தார். தேசிய பங்கு சந்தைக் கழக தலைமை மேலாளர் எஸ்.ரங்கநாதன், மூத்த மேலாளர் செந்தில்முருகன், மேலாளர் வினோத் ஜேம்ஸ், ஓய்வு பெற்ற மூத்த பேராசிரியர் முனைவர் எஸ்.அய்யம்பிள்ளை ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர். வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.